**உணவுப் பணவீக்கம் அதிகரிப்பு**

First Published : 30 Sep 2011 03:26:39 AM IST

புதுதில்லி, செப்.29: நாட்டின் உணவு பணவீக்கம் செப்டம்பர் மாதம் 17ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் 9.13 சதவீதமாக உயர்ந்தது. இதற்கு முந்தைய வாரம் இது 8.84 சதவீதமாக இருந்தது.

பருப்பு, காய்கறிகள், பழங்கள் போன்றவற்றின் விலை உயர்வின் காரணமாக, கடந்த 17 ம் தேதி வரையிலான காலத்தில் உணவுப் பணவீக்கம் 9.13 சதவீதமாக உயர்ந்துள்ளது. குறிப்பாக, உருளைக்கிழங்கு, பருப்புகளின் விலை உயர்வு காரணமாக, உணவு பணவீக்கம் அதிகரித்துள்ளது.

உணவு அல்லாத இனங்களின் விலையேற்றம் ( எண்ணெய் வித்துகள், தாதுக்கள், நூலிழைகள்) கடந்த செப்டம்பர் 10ம் தேதி வரை 12.89 சதவீதத்திலிருந்து இப்போது 17.42 சதவீதமாக உயர்ந்துள்ளதாக மத்திய தொழில் மற்றும் வர்த்தக துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனால் உணவுப் பண வீக்கமும் 9 சதவீதத்திற்கு மேல் உள்ளதாக கூறப் படுகிறது. வெங்காயம் 17.40 சதவீதம், காய்,கனிகள் 11.98 சதவீதம், அரிசி 3.48 சதவீதம், பருப்பு 4.86 சதவீதம் என அதிகரித்துள்ளன.

செப்டம்பர் 10 ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், உணவுப் பணவீக்கம் 9.47 சதவீதத்திலிருந்து 8.84 சதவீதமாக குறைந்து இருந்தது.

பணவீக்கத்ததை குறைக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதை கட்டுக்குள் கொண்டு வர, கடந்த ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து,வங்கி கடன்கள் மீதான வட்டிவிகிதங்களை 12 முறை ரிசர்வ் வங்கி உயர்த்தி உள்ளது குறிப்பிடத்தக்கது.

கவலை அளிக்கிறது : இது இரட்டை இலக்கத்தை தொடும் அளவுக்கு அதிகரித்துள்ள உணவுப் பண வீக்கம் உயர்வு மிகவும் கவலையளிப்பதாக மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறினார். சாமான்ய மக்களை பாதிக்கும் உணவுப் பொருள்கள் விலை உயர்வு குறித்து மத்திய அரசுக்கு பெரும் கவலையளிப்பதாக நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறினார்.

**சமையல் எண்ணெய் ஏற்றுமதி மீதான தடை மேலும் ஓராண்டுக்கு நீட்டிப்பு**

First Published : 30 Sep 2011 03:25:58 AM IST

புதுதில்லி, செப். 29: சமையல் எண்ணெய் மீதான ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட தடை அடுத்த ஆண்டு செப்டம்பர் வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டில் சமையல் எண்ணெய் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்ததையடுத்து, மத்திய அரசு சமையல் எண்ணெய் ஏற்றுமதிக்கு கடந்த 2008 ம் ஆண்டு மார்ச் மாதம் தடை விதித்தது. இது ஒராண்டுக்கு அமலில் இருக்கும் என அப்போது அறிவிக்கப்பட்டது. ஆனால், ஒவ்வொரு ஆண்டும் இத்தடை நீட்டிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் இத்தடையை மேலும் ஒராண்டுக்கு நீட்டித்து மத்திய வர்த்தம், தொழில் துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. இது அடுத்த ஆண்டு செப்டம்பர் வரையில் நடைமுறையில் இருக்கும். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப் பட்டுள்ளதாவது :

சமையல் எண்ணெய் ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும், சில விலக்குகளும் இதில் அளிக்கப்பட்டுள்ளன. 10 ஆயிரம் டன் வரை பிராண்ட் பெயர் கொண்ட எண்ணெயை இந்த ஆண்டு நவம்பர் முதல் தேதியிலிருந்து அடுத்த ஆண்டு செப்டம்பர் வரை ஏற்றுமதி செய்யலாம் என விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மீன் எண்ணெய் ஏற்றுமதிக்கு தடையில்லை.

2010-11ம் ஆண்டில், எண்ணெய் வித்துகள் உற்பத்தி எப்போதும் இல்லாத அளவாக, 3.1 கோடி டன்னாக உள்ளது. 1.26 கோடி டன் சோயா, 75 லட்சம் டன் நிலக்கடலை, 76லட்சம் டன் கடுகு அறுவடை செய்யப்பட்டிருக்க வேண்டும் என மத்திய வேளாண் துறை அமைச்சகத்தின் நான்காவது மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்றாவது மதிப்பீட்டு அளவை விட, எண்ணெய் வித்துகள் உற்பத்தி அதிகமாக இருந்தது. இதுவே சாதனையாகும் என மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் வித்துகளின் உற்பத்தி நன்குள்ளதால், இறக்குமதி செய்யப்படும் தாவர எண்ணெயின் அளவு 10 லட்சம் டன் குறையும் என இத்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**வான்கோழி, மீன் வளர்ப்பு சான்றிதழ் பயிற்சி**

First Published : 29 Sep 2011 03:27:56 PM IST

தஞ்சாவூர், செப். 28: தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக தொலைநிலைக் கல்வி இயக்ககம் சார்பில் வான்கோழிப் பண்ணை உதவியாளர், நன்னீர் மீன் வளர்ப்பு குறித்த ஒரு மாத சான்றிதழ் பயிற்சியில் சேர அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தஞ்சையில் உள்ள பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத் தலைவர் பி. புண்ணியமூர்த்தி விடுத்துள்ள செய்திக் குறிப்பு:

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தின் மூலம் கால்நடை கோழியினம், மீன் வளர்ப்பு மற்றும் மேலாண்மை குறித்த

பல்வேறு செயல்திறன் மேம்பாட்டு மற்றும் சுய வேலைவாய்ப்பு நேரடி பயிற்சி அளிக்கப்பட இருக்கிறது.

தஞ்சாவூரில் உள்ள இப்பல்கலை. பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் தமிழில் நடத்தப்படும் கீழ்கண்ட செயல்திறன் மேம்பாட்டு மற்றும் சுய வேலைவாய்ப்பு நேரடி பயிற்சிகளில் சேர விரும்புவோர் அக். 14-க்குள் விண்ணப்பிக்கலாம்.

வான்கோழிப் பண்ணை உதவியாளர் பயிற்சி : ஒரு மாதம், தமிழ்வழி, கட்டணம் ரூ. 1,000, 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற 18 வயதுக்கு மேல் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

நன்னீர் மீன் வளர்ப்புப் பயிற்சி : ஒரு மாதம், தமிழ் வழி, கட்டணம் ரூ. 1,000, 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப் படிவத்தை எண். 205, 4-ம் தெரு, ரகுமான்நகர், நாஞ்சிக்கோட்டை சாலை, தஞ்சாவூர்-6 என்ற முகவரியில் பெறலாம். தொடர்புக்கு : 04362 255462, 255625,

**முட்டை விலை**

First Published : 29 Sep 2011 11:11:27 AM IST

நாமக்கல், செப்.28: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.2.61, சென்னையில் ரூ. 2.65. கறிக்கோழி விலை பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு புதன்கிழமை அறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள் முதல் விலை கிலோ ரூ.49, முட்டைக் கோழி கிலோ ரூ.40.

**மரவள்ளிக்கிழங்கு பயிரில் மாவுப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த யோசனை**

First Published : 29 Sep 2011 03:47:51 PM IST

கரூர், செப். 28: மரவள்ளிக்கிழங்குப் பயிரில் மாவுப்பூச்சியின் தாக்குதலைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து தாந்தோன்றிமலை வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் லூ. சொர்ணமாணிக்கம் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தோட்டக்கலைப் பயிர்களில் தற்போது மாவுப்பூச்சியின் தாக்குதல் பரவலாகக் காணப்படுகிறது. குறிப்பாக, மரவள்ளிப்பயிரில் இதன் தாக்குதல் பொருளாதாரச் சேத நிலைக்கு மேல் காணப்படுகிறது. அதிக வெப்பம், வறண்ட வானிலை, மழைக் குறைவு போன்றவற்றால் இந்தப் பூச்சிகளின் இனப்பெருக்கம் அதிகரிக்கிறது.

மாவுப்பூச்சி என்பது உடல் முழுவதும் ஒருவித மாவு போன்ற மெழுகுப் பூச்சுடன் கூடிய, மிகச்சிறிய வெளிர் மஞ்சள் நிறப் பூச்சியாகும். ஒரு பெண் பூச்சி தனது 2 மாத கால ஆயுளில் 3 முறைகளில் 600 முட்டைகள் வரை இடும். இந்த முட்டைக் குவியல்கள் வெண்மை நிற பஞ்சு போன்ற பொருளால் மூடப்பட்டிருக்கும். பெண் பூச்சிகள் மட்டுமே பயிர்களைத் தாக்கும்.

இந்தப் பூச்சிகளின் தாக்குதல் காணப்படும் வயல்களில் சிவப்பு, கறுப்பு நிற எறும்புகளின் நடமாட்டம் அதிகமிருக்கும். இலைகளின் அடிப்பகுதிகள், குருத்துப் பகுதிகளில் முதலில் தாக்குதல் தென்படும். பளபளப்பான ஒட்டும் தன்மை கொண்ட தேன் போன்ற கழிவுகளும், அதன் மேல் பூசண வளர்ச்சியும் காணப்படும்.
அதிகத் தாக்குதலில் செடிகள் இலையின்றி வாடிவிடும்.

அயல்நாடுகளிலிருந்து வந்த பூச்சிகள் என்பதால், இவற்றை பூச்சி மருந்துகளால் எளிதில் கட்டுப்படுத்த முடியாததோடு, இதற்கு இயற்கை எதிரிகளும் அதிகம் இல்லாததாலும் மிக வேகமாக இவை பரவுகின்றன. இந்தப் பூச்சிகள் பயிர் சாகுபடி இல்லாத காலங்களில், பார்த்தீனியம், எருக்கு போன்ற களைச் செடிகளையும் தாக்கி, அவை மூலம் வளர்கின்றன.

எனவே, மாவுப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளை விவசாயிகள் மேற்கொள்ள வேண்டும். வயல்களிலும், சுற்றியுள்ள பகுதிகளிலும் களைகளின்றிப் பராமரிக்க வேண்டும். தாக்குதலுக்குள்ளான பயிர்கள், களைகளைப் பிடுங்கி எரித்து அழிக்கலாம். மரவள்ளிப் பயிரின் மேல் இலைகள் நன்கு நனையும் வகையில் தண்ணீரை அதிகளவில் வேகமாகத் தெளித்தும், இந்தப் பூச்சிகளின் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம்.

பொறி வண்டுகள், குளவிகள் போன்ற மாவுப்பூச்சிகளின் இயற்கை எதிரிகள் அதிகம் காணப்படும் வயல்களில் பூச்சி மருந்துகளைத் தெளிப்பதைத் தவிர்க்கலாம்.

தாக்குதல் குறைவாகத் தென்படும்போது, 2 சத வேப்பெண்ணெய் அல்லது 2 சத அசாடிராக்டின் அல்லது 5 சத வேப்பங்கொட்டைக் கரைசலைத் தெளித்து, மாவுப்பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம்.

ஏக்கருக்கு 250 மி.லி. புங்க எண்ணையை 250 மி.லி. வேப் எண்ணெயுடன் கலந்து, ஒட்டும் திரவம் 10 மி.லியுடன் சேர்த்து தெளிக்கலாம். மேலும், பச்சை மிளகாய், இஞ்சி, பூண்டு மூன்றையும் தலா 250 கிராம் வீதம் சேர்த்து அரைத்து, அதை 2 லிட்டர் நாட்டுப் பசுவின் கோமியத்தில் 2 நாள்கள் ஊற வைத்துப் பெறப்படும் 300 மி.லி. கரைசலுடன் 10 மி.லி. ஒட்டும் திரவத்தைச் சேர்த்து 10 லிட்டர் நீருடன் கலந்து, 10 நாள்கள் இடைவெளியில் தேவைக்கேற்ப தெளிக்கலாம்.

இந்த முறைகளை சுழற்சி முறையில் செய்து வந்தால், மாவுப் பூச்சிகளைக் கட்டுப்படுத்தலாம். மேலும், ஒரு கிராமத்தில் அனைத்து விவசாயிகளும் கூட்டு முயற்சியாக ஒரே நேரத்தில் இதை மேற்கொள்ளும்போது, மாவுப் பூச்சியின் தாக்குதலை முழுமையாகக் கட்டுப்படுத்தி, அதிக மகசூலைப் பெறலாம் என்றார் அவர்.

**நுண்ணுயிரியியல் துறை கருத்தரங்கம்**

First Published : 29 Sep 2011 01:41:59 PM IST

வந்தவாசி, செப். 28: வந்தவாசி ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி மகளிர் கல்லூரியில் நுண்ணுயிரியியல் துறை சார்பில் கருத்தரங்கம் புதன்கிழமை நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் டாக்டர் புஷ்பவல்லி தலைமை வகித்தார். கடல்வாழ் நுண்ணுயிர்கள் மூலம் பெறப்படும் பொருள்கள் என்ற தலைப்பில் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக இணை பேராசிரியர் டாக்டர் எஸ்.ஜெயலஷ்மி பேசினார்.

கல்லூரிச் செயலர் எம்.ரமணன், நுண்ணுயிரியியல் துறைத் தலைவர் கே.ஜெகதி, விரிவுரையாளர் கே.வான்மதிசெல்வி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 83.69 அடி**

First Published : 29 Sep 2011 10:39:17 AM IST

ஈரோடு, செப்.28: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் புதன்கிழமை 83.69 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,942 கன அடி தண்ணீர் வந்தது.

ஆற்றில் விநாடிக்கு 1,400 கன அடி, வாய்க்காலில் விநாடிக்கு 2,300 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 7.72 டிஎம்சி.

ஆற்றில் மூழ்கி இளைஞர் பலி

உதகை, செப் 28: மசினகுடி அருகே ஆற்றில் மூழ்கி இளைஞர் உயிரிழந்தார்.

உதகை அருகேயுள்ள மசினகுடி பகுதியைச் சேர்ந்தவர் பாபு (19). இவர் தற்போது அவினாசி பகுதியில் வேலை பார்த்து வருகிறார். தசரா விடுமுறைக்காக சொந்த ஊருக்கு வந்திருந்த பாபு வியாழக்கிழமை மசினகுடி அருகேயுள்ள ஆச்சக்கரை பகுதியில் ஓடும் ஆற்றில் குளிப்பதற்காக இறங்கியபோது, அங்கிருந்த சுழலில் சிக்கி உயிரிழந்தார்.

இது தொடர்பாக மசினகுடி காவல்துறையினர் வழக்குப் பதிந்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

தினமலர்
உண்மையின் உரைகல்

**உணவு பணவீக்கம் 9.13 சதவீதமாக உயர்வு**

செப்டம்பர் 30,2011,00:51




புதுடில்லி:நாட்டின் உணவுப் பொருள் பணவீக்கம், செப்டம்பர் 17ம் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், 9.13 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 8.84 சதவீதமாகக் குறைந்து காணப்பட்டது. ஆக, உணவுப் பொருட்களின் பணவீக்கம், 0.29 சதவீதம் அதிகரித்துள்ளது. மதிப்பீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், ஆண்டின் அடிப்படையில், உருளைக் கிழங்கின் விலை, 15 சதவீதம் உயர்ந்துள்ளது. இருப்பினும், பழங்கள் மற்றும் காய்கறிகளின் விலை குறைந்துள்ளது. இதுதவிர, உணவு தானியங்கள், பால், முட்டை, இறைச்சி மற்றும் மீன்ஆகிய வற்றின் விலை, 13.17 சதவீதம் சரிவடைந்துள்ளது.முக்கிய உணவுப் பொருட்களின் விலை, 11.43 சதவீதமாகக் குறைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 12.17 சதவீதமாக அதிகரித்திருந்தது. மொத்த விலைக் குறியீட்டு எண் கணக்கீட்டில், முக்கிய பொருட்களின் பங்களிப்பு, 20 சதவீதத்திற்கும் மேல் உள்ளது. உணவு சாரா பொருட்கள் பிரிவில், நூலிழை, எண்ணெய் வித்துக்கள் மற்றும் தாதுப் பொருட்களின் விலை, 12.89 சதவீதமாகச் சரிவடைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 17.42 சதவீதமாக மிகவும் அதிகரித்துக் காணப்பட்டது.அதே சமயம், எரிபொருள் மற்றும் மின்சாரம் ஆகியவற்றிற்கான பணவீக்கம், 14.69 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 13.96 சதவீதமாகக் குறைந்து காணப்பட்டது. சென்ற ஆகஸ்ட் மாதத்தில், தயாரிப்புத் துறை பொருட்கள், எரிபொருள் மற்றும் உணவு சாரா பொருட்களின் பண வீக்கத்தால், சென்ற ஆகஸ்ட் மாதத்தில் நாட்டின் பொதுப் பணவீக்கம், கடந்த 13 மாதங்களில் இல்லாத அளவிற்கு, 9.78

சதவீதமாக அதிகரித்துக் காணப்பட்டது.பணவீக்கத்தைக் கட்டுக்குள் கொண்டு வரும் வகையில், ரிசர்வ் வங்கி, கடந்த 2010ம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து இதுவரையிலுமாக, வங்கிகளுக்கான வட்டி விகிதத்தை, 12 முறை உயர்த்தியுள்ளது. இது குறித்து, மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறுகையில், " நாட்டின் பணவீக்கம், இரட்டை இலக்கத்தை நெருங்கி வருவது, கவலை அளிப்பதாக உள்ளது.கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், ஆண்டுக் கணக்கில், பருப்பு வகைகள் மற்றும் கோழி சார்ந்த உணவுப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. முக்கிய பொருட்களின் விலை குறைந்துள்ள போதிலும், எரிபொருள் மற்றும் மின்சாரம், மசகு எண்ணெய் ஆகியவற்றின் விலை உயர்வால் பணவீக்கம் அதிகரித்துள்ளது.கடந்த சில வாரங்களாக, நாட்டின் பணவீக்கத்தில் நிலவி வரும் ஏற்ற இறக்கம், கவலை அளிப்பதாக உள்ளது' என தெரிவித்தார்.

**வெற்றி விலை வீழ்ச்சியால் விவசாயிகள் கடும் அதிர்ச்சி**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 30,2011,00:18 IST

கரூர்: ஆயுதபூஜை திருவிழா நெருங்கும் நிலையில் வெற்றிலைக்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் பெரும் அதிர்ச்சியில் உள்ளனர். கரூர் மாவட்டத்தில் புகளூர், வேலாயுதம்பாளையம், நொய்யல், சேமங்கி, நடையனூர், மரவாபாளையம், தவிட்டுபாளையம், திருகாடுதுறை உள்ளிட்ட பகுதிகளில் 5,000 க்கும் மேற்பட்ட ஏக்கரில் வெற்றிலை பயிரிடப்படுகிறது. காவிரியாற்றின் ஓரத்தில் தண்ணீர் அதிகம் உள்ள பகுதிகளில் அதிகளவில் வெற்றிலை சாகுபடி நடக்கிறது. இதனால் பசுமை மறாத நிறம் மற்றும் தனிச்சுவை உள்ளதால் கரூர் மாவட்டத்தில் விளையும் வெற்றிலைக்கு உள்ளூர், வெளியூர் மற்றும் வெளிமாநிலங்களிலும் நல்ல கிராக்கி உண்டு. கற்பூரம் பச்சைகொடி, இளங்கால் மற்றும் முதுகால் ரகம் அதிகளவில் பயிரிடப்படுகிறது. 102 வெற்றிலை கொண்டது ஒரு கவுளியாகவும், 20 கவுளி கொண்டது ஒரு கூடையாகவும், 26 கவுளிகள் கொண்டது ஒரு முட்டியாகவும், 104 கவுளிகள் கொண்டது ஒரு சுமையாகவும் பல வகைகளில் விற்பனை செய்யப்படுகிறது. கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு ஒரு கூடை கற்பூர வெற்றிலை 600 ரூபாய் முதல் 750 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது ஒரு கூடை 320 ரூபாய்க்கும், ஒரு கவுளி 16 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. ஆயுதபூஜை மற்றும் நவராத்திரி விழா தொடங்கிய நிலையில் வெற்றிலைக்கு திடீரென விலை குறைந்துள்ளதால், ஆடிப்பட்டத்தில் அதிகளவில் வெற்றிலை பயிரிட்டுள்ள விவசாயிகள் பெரும் சோகத்தில் உள்ளனர்

தினகரன்

**உணவு எண்ணெய் ஏற்றுமதி தடை மேலும் நீட்டிப்பு**

பதிவு செய்த நாள் : 9/30/2011 5:45:43



புதுடெல்லி : உணவு எண்ணெய்கள் ஏற்றுமதி தடையை மேலும் ஓராண்டுக்கு மத்திய அரசு நீட்டித்துள்ளது. உள்நாட்டு தேவை யை கருத்தில் கொண்டு முதல் கட்டமாக கடந்த 2008 மார்ச் 17ம் தேதி முதல் உணவு எண்ணெய்கள் ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்டது. அதுமுதல் தொடர்ந்து இதுவரை பல்வேறு கட்டமாக தடை நீட்டிக் கப்பட்டுள்ளது. தற்போது மேலும் ஓராண்டுக்கு அதாவது 2012 மார்ச் 30 வரை ஏற்றுமதிக்கான தடை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் நவம்பர் 1 முதல் 2012 அக்டோபர் 31 வரை 10,000 டன் பிராண்டடு உணவு எண்ணெய் ஏற்றுமதிக்கு அனுமதிக்கப்பட்டு உள்ளது. ஜூன் மாதத்துடன் (2010&11) முடிந்த பருவத்தில் நாட்டின் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 3.11 கோடி டன் என்று வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

தினத் தந்தி DAILY THANTHI

## காய்கறி, பருப்பு வகைகள் விலை அதிகரிப்பால்

## உணவு பொருள் பணவீக்கம் 9.13 சதவீதமாக உயர்ந்தது

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
காய்கறி, பருப்பு வகைகள் விலை அதிகரிப்பால், செப்டம்பர் 17–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், உணவு பொருள் பணவீக்கம் 9.13 சதவீதமாக சற்று உயர்ந்தது. மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் இப்பணவீக்கம் முந்தைய வாரத்தில் 8.84 சதவீதமாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது 0.29 சதவீதம் உயர்ந்துள்ளது.

உருளைக்கிழங்கு

சென்ற ஓர் ஆண்டு காலத்தில், காய்கறிகள் மற்றும் பருப்பு வகைகள் விலை முறையே 11.98 சதவீதம் மற்றும் 4.86 சதவீதம் உயர்ந்துள்ளது. வெங்காயம், உருளைக்கிழங்கு விலை முறையே 17.04 சதவீதம் மற்றும் 14.91 சதவீதம் அதிகரித்துள்ளது. பழங்கள் விலை 12.47 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், முட்டை, மீன், இறைச்சி ஆகிய அசைவ உணவு பொருள்கள் விலை 13.17 சதவீதம் உயர்ந் துள்ளது. அரிசி விலை 3.48 சதவீதம் உயர்ந்துள்ள நிலையில், கோதுமை விலை 2.67 சதவீதம் குறைந்துள்ளது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், அத்தியாவசிய பொருள்கள் பணவீக்கம் 12.17 சதவீதத்திலிருந்து 11.43 சதவீதமாக குறைந்துள்ளது. எரிபொருள் பணவீக்கம் 13.96 சதவீதத்திலிருந்து 14.69 சதவீதமாக அதிகரித்துள்ளது.

உணவு பொருள் பணவீக்கம் தற்போது 9 சதவீதத்தை தாண்டி உள்ளது. எனவே, இதை கட்டுப்படுத்த வேண்டியது அவசியம் என மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

பாரத ரிசர்வ் வங்கி பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் கடந்த 18 மாதங்களில் முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை 12 முறை உயர்த்தி உள்ளது. எனினும், உணவு பொருள் பணவீக்கம் கட்டுக்குள் வரவில்லை. மேலும், ஜூலை மாதத்தில் 9.22 சதவீதமாக இருந்த உணவு தானியங்கள், அத்தியாவசிய பொருள்கள் உள்ளிட்ட அனைத்து பொருள்களுக்கான பொது பணவீக்கம் ஆகஸ்டு மாதத்தில் 9.78 சதவீதமாக அதிகரித்துள்ளது.

தொழில்துறை உற்பத்தி

ரிசர்வ் வங்கி பல முறை வட்டி விகிதங்களை உயர்த்தியதையடுத்து, மோட்டார் வாகனங்கள் விற்பனை குறைந்து, நாட்டின் தொழில்துறை உற்பத்தி வளர்ச்சி வேகம் சரிவடைந்து வருகிறது. எனவே, உணவு பொருள் பணவீக்கத்தை கட்டுப்படுத்த, உணவு தானியங்கள் அளிப்பை அதிகரிக்க மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என பொருளியல் நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

### சர்க்கரை
வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,880–2,950

### மணிலா பயறு
80 கிலோ கொண்ட மூட்டை
3,780–3,850

### கடலை எண்ணெய்
ஒரு குவிண்டால் (வரி உள்பட)
9,650–00

### கடலை புண்ணாக்கு
70 கிலோ மூட்டை
(சாக்கு வரி உள்பட) 1,800–00

### தேங்காய் எண்ணெய்
15 கிலோ கிராம் கொண்ட
டின் (வரி உள்பட) 1,949–00

### நல்லெண்ணெய்
குமரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்.
1குவிண்டால் (வரி உள்பட) 10,500–00
டின் (15 கிலோ) 1,750–00

### விளக்கெண்ணெய்
ஒரு குவிண்டால் (வரி உள்பட)
10,500.00
15 கிலோ டின் (வரி உள்பட) 1,980–00

### சூரியகாந்தி எண்ணெய்
சுத்திகரிக்கப்பட்டது 15 கிலோ
டின் (வரி உள்பட) 1,245.00

### ரீபைண்டு ஆயில்
(சுத்திகரிக்கப்பட்ட எண்ணை)
15 கிலோ டின் (வரி உள்பட) 1,635.00

### வனஸ்பதி
டின் ஒன்றுக்கு (வரி உள்பட) 1,125.00

### பாமாயில்
10 கிலோ டின் (வரி தனி)
548–00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை, செப்.29–

கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:–

| பருப்புவகைகள் | 100 கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 9,000 | 95.00 |
| மல்லி (40கி) | ரூ. 3,200 | 90.00 |
| புளி (40கி) | ரூ. 3,600 | 96.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,080 | 110.00 |
| து.பருப்பு | ரூ. 5,800 | 60.00 |
| க.பருப்பு (பாம்பே) | ரூ. 5,200 | 54.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) | ரூ. 6,100 | 64.00 |
| உ.பருப்பு (வெள்ளை) | ரூ. 7,400 | 78.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 3,900 | 44.00 |
| குண்டு கடலை | ரூ. 4,500 | 48.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 3,200 | 62.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 5,200 | 70.00 |
| பச்சைபயிறு | ரூ. 5,400 | 56.00 |
| கொள்ளு | ரூ 1,700 | 20.00 |
| க.பருப்பு (டெல்லி) | ரூ. 4,800 | 51.00 |
| சர்க்கரை | ரூ. 2,930 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை, செப்.29–

கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:–

1. வி.797 22எம்.எம் ரூ. 7,311
2. ஜெயதார் (கர்நாடகா) ரூ. 6,717
3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) ரூ. 10,715
4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் ரூ. 10,264
5. சங்கர் 6 28 எம்.எம். புதியது ரூ. 11,248
6. எம்.சி.யு. 5 32 எம்.எம். ரூ. 11,248
7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு ரூ. 15,044

## கோவை உழவர் சந்தை

கோவை, செப்.29–

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:–

### காய்கறிகள் (கிலோவுக்கு)

| | | |
|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 32–40 |
| கத்தரிக்காய் | ரூ. | 10–14 |
| வெண்டைக்காய் | ரூ. | 18–21 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 10–11 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 16–19 |
| புடலை | ரூ. | 12–15 |
| பீர்க்கான்காய் | ரூ. | 12–18 |
| சுரைக்காய் | ரூ. | 10–12 |
| பாகற்காய் | ரூ. | 10–12 |
| கொத்தவரை | ரூ. | 18–20 |
| பூசணிக்காய் | ரூ. | 8–10 |
| அரசாணிக்காய் | ரூ. | 10–11 |
| பேராக்காய் | ரூ. | 12–00 |
| பச்சை மிளகாய் | ரூ. | 16–00 |
| குண்டு மிளகாய் | ரூ. | 18–00 |
| சின்னவெங்காயம் | ரூ. | 14–20 |
| பெரியவெங்காயம் | ரூ. | 12–18 |
| இஞ்சி | ரூ. | 20–40 |
| முருங்கைக்காய் | ரூ. | 28–33 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 18–20 |
| சேனைகிழங்கு | ரூ. | 20–00 |
| கருணைகிழங்கு | ரூ. | 24–00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 24–00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 10–13 |
| சக்கரவள்ளிகிழங்கு | ரூ. | 10–13 |
| சிறுகிழங்கு | ரூ. | 18–00 |
| முள்ளங்கி | ரூ. | 21–16 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 30–33 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 12–20 |
| நூல்கோல் | ரூ. | 16–22 |
| கொத்தமல்லி | ரூ. | 20–30 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 16–22 |
| முட்டைகோஸ் | ரூ. | 10–13 |
| கலர்கோஸ் | ரூ. | 16–18 |
| புதினா | ரூ. | 16–00 |

| | | |
|---|---|---|
| காலிப்பிளவர் | ரூ. | 16–22 |
| பொறியல் தட்டை | ரூ. | 12–16 |
| தேங்காய் | ரூ. | 7–14 |
| பட்டாணி | ரூ. | 80–100 |
| கறிவேப்பிலை | ரூ. | 20–14 |
| பூண்டு | ரூ. | 100–130 |
| அகத்தி | ரூ. | 12–18 |
| வாழைக்காய் | ரூ. | 20–25 |
| குடைமிளகாய் | ரூ. | 34–36 |
| சாதா பீன்ஸ் | ரூ. | 20–24 |
| டபுள்பீன்ஸ் | ரூ. | 40–00 |
| கறிபீன்ஸ் | ரூ. | 20–24 |
| புஸ்பீன்ஸ் | ரூ. | 30–32 |
| காளான் | ரூ. | 80–150 |
| இளநீர் (ஒன்று) | ரூ. | 11–14 |
| மாங்காய் | ரூ. | 30–35 |
| திராட்சை | ரூ. | 38–00 |
| சப்போட்டா 1கிலோ | ரூ. | 35–00 |
| கொய்யா1கிலோ | ரூ. | 18–20 |
| மாதுளை1கிலோ | ரூ. | 100–00 |
| பப்பாளி 1 கிலோ | ரூ. | 13–14 |
| வரமிளகாய் | ரூ. | 100–140 |
| மாம்பழம் | ரூ. | 60–00 |
| ஆப்பிள் | ரூ. | 110–120 |
| சாத்துக்குடி | ரூ. | 20–00 |
| நெல்லிக்காய் | ரூ. | 30–35 |
| ஆரஞ்சு | ரூ. | 50–00 |
| வெள்ளரி | ரூ. | 14–28 |
| புளி 1 கிலோ | ரூ. | 100–120 |
| பஜ்ஜிமிளகாய் | ரூ. | 30–32 |
| அவரை | ரூ. | 19–21 |
| நிலக்கடலை | ரூ. | 30–00 |
| மக்காச்சோளம் | ரூ. | 12–28 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:–

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ. 29,700 |
| மிளகு (சேட்டன்) | ரூ. 30,700 |
| மிளகு (வயநாடன்) | ரூ. 31,000 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 15,000 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 12,000 |
| சுக்கு (புதியது) | ரூ. 12,000 |
| சுக்கு(பழையது) | ரூ. 10,100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ. 1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ. 1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ. 8860 |
| கொப்பரை நாடன் | ரூ. 6750 |
| கொப்பரை ராசு | ரூ. 6650 |
| கொப்பரை தில்பசன் | ரூ. 6875 |
| கொப்பரை ராஜிப்பூ | ரூ. 8100 |
| உருண்டை கொப்பரை | ரூ. 7100 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 19,800 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 21,200 |
| ரப்பர் பால் | ரூ. 15,000 |
| காப்பி | ரூ. 10,700 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 5,800 |
| நேந்திரகாய் | ரூ. 1,100 |
| இஞ்சி | ரூ. 480 |

## எண்ணை மார்க்கெட்

கோவை, செப்.29–

கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:–

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லரை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் கணபதி பிராண்ட் | ரூ.1,740 | 115.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1,220 | 75.00 |
| சன் பிளவர் ஆயில் கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1270 | 82.00 |
| பருத்தி விதை எண்ணை ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1100 | ——— |
| அரிசி தவிடு எண்ணை பூர்ணாபிராண்டு | ரூ.1240 | 80.00 |
| நல்லெண்ணை காந்திமதி பிராண்ட் | ரூ. 1,400 | 100.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1600 | 110.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,850 | 120.00 |
| பாம் ஆயில் ருசிபிராண்டு | ரூ. 1,080 | 60.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,570 | 102.00 |
| வனஸ்பதி லில்லி பப்ஸ் பிராண்ட் | ரூ. 1,260 | – |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1030 | – |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,070 | – |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,070 | – |

## பட்டுக்கூடு

| மஞ்சள் கலப்பினம் | | வெள்ளை கலப்பினம் | |
|---|---|---|---|
| அதிகபட்சவிலை | ரூ.191.00 | அதிகபட்சவிலை | ரூ.270.00 |
| சராசரி விலை | ரூ.173.61 | சராசரி விலை | ரூ.244.60 |
| குறைந்தபட்சவிலை | ரூ.140.00 | குறைந்தபட்சவிலை | ரூ.215.00 |

**பட்டு நூல் ரூ.1,723**

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 19,512.00 | 19,512.00 | 19,560.00 |
| ஒரு கிராம் | 2,439.00 | 2,439.00 | 2,445.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 52,340.00 | 56,000.00 | 56,000.00 |
| ஒரு கிராம் | 56.00 | 56.00 | 56.00 |